
# சுதந்திரச் செம்மல்
# சேலம் ஆதிநாராயணன் செட்டியார்






டாக்டர். V.G. மோகன் பிரசாத்
உடுமலை அமிர்தநேயன்

## சுதந்திரச் செம்மல் ஆதி நாராயணன் செட்டியார்
## (அ) அபூர்வ மனிதர் ஆதி நாராயணன் செட்டியார்

– உடுமலைஅமிர்தநேயன்

# THE GREAT PATRIOT
# SALEM P.ADHINARAYANA CHETTY.

*-Udumalai Amirthaneyan*

## வாழ்க சுதந்திரச் செம்மல் !

பாரத விடுதலை வேள்வியிலே
வீரசுதந்திரம் வேண்டி நின்ற
மாரத வீரர், மகத்தான மனிதர்
ஆதிநாராயணன் வாழியவே !
வைசிய குலத்தின் மணிவிளக்காய்
வையகம் வாழ தொண்டு செய்த
ஆதிநாராயணன் வாழியவே !
காந்தியைத் தொடர்ந்த கண்ணியவான்;
ராஜாஜி வாழ்த்திய புண்ணியவான்
ஆதி நாராயணன் வாழியவே !
நாட்டுக் குழைத்த நல்லவரின்
வீட்டுப் பிள்ளைகள் வணங்குகின்றோம்
பாட்டன் புகழைப் பாடுகின்றோம்
பரவசத்தோடு போற்றுகின்றோம்.

ஜெயஸ்ரீ ஆதிகேசவன்
A.நிர்மல்குமார்
Dr.ராஜேந்திர பிரசாத்
ரேணுகா ஸ்ரீதரன்
Dr.V.G.மோகன் பிரசாத்

## அணிந்துரை

மறைந்த மாமேதை பாரத ரத்னா டாக்டர் அப்துல் கலாம் அய்யா அவர்களின் நட்பும், அன்பும் கிடைத்தது என் வாழ்வில் நானடைந்த பெரும் பாக்கியம்.

ஒரு முறை அவரது இல்லத்தில் சந்தித்து அவருடன் பேசிக் கொண்டிருந்த பொழுது, எனது தாய்வழிப் பாட்டனாரும் சுதந்திரப் போராட்ட வீரருமான பாரிஸ்டர் சேலம் ஆதிநாராயணன் பற்றிய விபரங்களைக் கூறினேன். எனது பாட்டனாரின் சுதந்திரப் போராட்ட பங்களிப்பைக் குறித்து வியந்த அப்துல் கலாம் அவர்கள் மோகன் ! உங்கள் தாத்தாவின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து எனக்கு எழுதி அனுப்புங்கள், நான் நமது இந்திய அஞ்சல் துறைக்கு பரிந்துரைத்து அவருக்கு ஒரு நினைவு தபால் தலையை வெளியிட ஏற்பாடு செய்கிறேன் என்றார். நானும் ஒப்புக் கொண்டு விடை பெற்றேன்.

சில நாட்கள் கழித்து எனதன்பு இளவல் உடுமலை அமிர்தநேயன் என்னைக் காண கோவை வந்த பொழுது, எனது பாட்டனாரின் வரலாற்றை தேடிக் கண்டு பிடித்து, எழுதிக் கொடுங்கள் என்று அவரிடம் கூறினேன். செய்வதாக கூறிச் சென்றார். ஆனால், அவருடைய வேலைப் பளுவினால் தாத்தாவின் வரலாறு எழுதும் பணி மிக மெதுவாக நடந்தது.

இந்நிலையில் சென்ற வருடம் பிப்ரவரியில் மீண்டும் மாமேதை அப்துல் கலாம் அவர்களை சந்தித்த பொழுது, அவர் எனது பாட்டனாரின் வரலாறு எழுதித் தருவது குறித்து கேட்டார். எனக்கு தூக்கிவாரிப் போட்டது. இந்த அளவிற்கு நினைவு வைத்துக் கொண்ட அவருடைய அன்பு எனக்கு மகிழ்ச்சியையும், நினைபடுத்துகின்ற அளவில் விட்டு விட்டோமே என்ற வருத்தம் ஏற்பட்டது.

உடனடியாக அமிர்தநேயனை அழைத்து இப்பணியை துரிதப் படுத்தினேன். அவரும் அலுவலகத்தில் விடுப்பு எடுத்துக் கொண்டு இப்பணியை ஜீலை 2015 முதல் வாரத்தில் முடித்துக் கொடுத்தார்.




அதனை அய்யா அப்துல் கலாம் அவர்களிடத்து ஒப்படைக்க முயன்ற போது, எதிர்பாராமல் அவர் இறைவனடி சேர்ந்தார். நாங்கள் அடைந்த வேதனைக்கு அளவேயில்லை. இருப்பினும் அவருடைய தூண்டுதலின்றி இப்பணியை (80 ஆண்டுகளுக்கு பிறகு) செய்திருப்போமா என்பது அய்யமே. எனவே, எனது பாட்டனாரின் வாழ்க்கை வரலாற்று நூலை டாக்டர் அப்துல் கலாம் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றோம்.

எனது உத்தரவை ஏற்று எனது அன்பிற்குரிய இளவல் கவிஞர் அமிர்தநேயன் எனது பாட்டனாரின் வாழ்க்கை வரலாற்றை மிகவும் நேர்த்தியாகவும், உண்மைக்கும் புறம்பில்லாமலும் உருவாக்கி உள்ளார். இந்நூலை பார்-அட்-லா சேலம் ஆதிநாராயணன் செட்டியாரின் 138 வது பிறந்த நாளான 22.09.2016 ல் வெளியிடுவதில் பெருமை கொள்கின்றோம்.

நன்றி ! வணக்கம் ! வந்தே மாதரம் !

**- டாக்டர் வி.ஜி.மோகன்பிரசாத்**



ஆதிநாராயணன் செட்டியார் - ஆதிலட்சுமி அம்மையார்

# வரலாறு எழுதிய வரலாறு

**- உடுமலை அமிர்தநேயன்**

இந்தியாவில், ஏன் உலகிலுள்ள தலைசிறந்த ஜீரணத்துறை மருத்துவர்களில் ஒருவராகத் திகழ்பவர் எனது அண்ணா டாக்டர்.வி.ஜி.மோகன் பிரசாத் அவர்கள். அவருடைய தமிழும், இசையும் எம்மை வெகுவாகக் கவர்ந்தவை. எனவே அவரை குறிப்பிடும் போதெல்லாம் **பல் கலை மருத்துவர்** என்றே குறிப்பிடுவேன்.

ஒரு தந்தையைப் போல் வழி நடத்தி எம்மைக் காக்கின்றார் அவர். சென்ற ஆண்டு அண்ணா அவர்கள் என்னை அழைத்து, எங்கள் பாட்டனார் சேலம் ஆதிநாராயணன் செட்டியாரின் வரலாற்றை தேடிக் கண்டுபிடித்து எழுத வேண்டுமென்று கூறினார். அதனை மாமேதை அப்துல் கலாம் அவர்களிடத்தில் கொடுக்க இருப்பதாகவும் விவரம் கூறினார். தம்மிடமிருந்த குறிப்புகளைக் கொடுத்தார்.

அந்தக் குறிப்புகள் ஒரு முழுமையான வரலாறு எழுதுமளவிற்கு போதுமானதாக இல்லை. சுதந்திரச் செம்மல் சேலம் ஆதிநாராயணன் செட்டியார் இறந்து 80 ஆண்டுகளாகின்றன. அவருடைய வாழ்வில் முக்கிய நிகழ்வுகள் நிகழ்ந்து கிட்டத்தட்ட நூறு ஆண்டுகள் ஆகின்றன. நூறு ஆண்டுகளுக்கு முந்தய விபரங்களை தேடுவது என்பது அத்தனை சுலபமானதாக இல்லை.

அவர் ராஜாஜியின் அத்யந்த நண்பர் என்பதால் அந்த நூலைப்பிடித்துக் கொண்டே எனது தேடுதலைத் தொடங்கினேன். தமிழகத்தின் முக்கிய நூலகங்களுக்கு சென்று மணிக்கணக்கில் வரலாற்று நூல்களைப் புரட்டினேன். கல்கி வார இதழின் காரியாலயத்திற்கு சென்று விபரங்கள் சேகரித்தேன். ராஜாஜியின் வாழ்க்கை குறித்த நூல்களைப் படித்து அதில் ஆதிநாராயணன் செட்டியார் குறித்த செய்திகளை எடுத்துக் கொண்டேன். சென்னையிலுள்ள கன்னிமாரா நூலகம், கோட்டூர்புரம் அண்ணா நூலகம், தேவநேயப் பாவாணர் நூலகம் போன்றவற்றின் நூலகர்கள், ஊழியர்கள் பெரும் உதவி புரிந்தார்கள்.



சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் (ராஜாஜி) வேலூர் சிறையில் இருந்த போது எழுதிய **ராஜாஜியின் ஜெயில் டைரி** - நூல் மட்டும் கிடைக்கவில்லை. இந்நூல் பாரதிய வித்யா பவனால் வெளியிடப்பட்டது. இன்று பதிப்பேயில்லை. பாரதிய வித்யா பவனை தொடர்பு கொண்ட போதும் நூல் இல்லை என்ற பதிலே கிடைத்தது.

திடீரென்று ஒரு நாள் சேலத்திலிருந்து திரு.நிர்மல் அண்ணா, ராஜாஜியின் ஜெயில் டைரி நூலின் ஒரு பிரதி திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் இருக்க வாய்ப்பிருப்பதாக தனது நண்பர் கூறியதாக தெரிவித்தார். சென்னையிலிருந்து புகைவண்டியில் ஈரோடு வந்து பின் திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் சென்றேன். அந்த இடம் குக்கிராமம்.

பெரும் பிரயத்தனத்தற்குப் பிறகு காந்தி ஆசிரமத்தில் நூலை தேடிப்பிடித்தேன். ஒரு பிரதி என்பதால் அவர்கள் என்னிடம் கொடுக்கத் தயங்கினர். நான் ஒரு ஒளி நகல் எடுத்துக் கொண்டு திருப்பித் தருவதாக வாக்களித்துவிட்டு, மூன்று கி.மீ பயணம் செய்து நாமக்கல் மெயின் ரோட்டிற்கு வந்து ஜெராக்ஸ் எடுத்தபின் மீண்டும் காந்தி ஆசிரமம் சென்று திருப்பிக் கொடுத்தேன்.

ராஜாஜியின் ஜெயில் டைரியில் பல இடங்களில் சேலம் ஆதிநாராயணன் செட்டியாரைப் பற்ற ராஜாஜி குறிப்பிட்டுள்ளார். ராஜாஜியின் ஆலோசனைப்படி, வெளியிலிருந்து ஆதிநாராயணன் செட்டியார் போராட்டங்களை நடத்தியுள்ளார்.

எனக்குக் கிடைத்த விபரங்களை நிகழ்வுகளின் காலவரிசைப்படி தொகுத்து ஓரளவு உருவாக்கியுள்ளேன். இப்பணி முடிந்துவிடவில்லை. இது ஒரு முதல்முயற்சியே. மேலும் முயற்சி செய்து மேற்கொண்டு விபரங்கள் கிடைத்தால் அவற்றையும், இவ்வரலாற்றில் இணைத்துக் கொள்வோம்.

இந்நூலைப் படிக்கும் அன்பர்கள் அன்னாரைக் குறித்து ஏதேனும் தகவல்கள இருந்தால் எங்களுடன் பகிருங்கள். இவ்வரலாற்றில் சேர்த்துக் கொள்வோம்.



இந்த மகோன்னத மனிதராம் சேலம் ஆதிநாராயணன் செட்டியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் பணியை எமக்கு அளித்த எனது அண்ணார் டாக்டர் வி.ஜி.மோகன் பிரசாத் அவர்கட்கு எனது பணிவான நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன். இதனால் ஒரு தியாகியின் வரலாற்றை அறிகின்ற வாய்ப்பும் பல அனுபவங்களும் ஏற்பட்டன.

இப்பணிக்கு ஒத்துழைத்து உதவிய வி.ஜி.எம். மருத்துவமனை அலுவலர் திரு.லெனின், திரு.வினோத் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் நன்றி.நூல் குறிப்புகள் பெற உதவி செய்தவர்களை தனியாக பட்டியலிட்டு நன்றி தெரிவித்துள்ளேன்.

முதல்படியை அழகாக தட்டச்சு செய்து கொடுத்த பொள்ளாச்சி, கிளாசிக் சிஸ்டம்ஸ், திரு.மூர்த்தி அவர்களுக்கு நன்றி.

நிறைவாக, எங்கள் எண்ணங்களை, எழுத்துகளை காகித மேடை ஏற்றி, வண்ணங்களால் வார்த்து அழகாக படைத்தளிக்கின்ற உடுமலை சாய் கிரியேட்டிவ் திரு.ராஜா அவர்களுக்கும், சாய் கிராபிக்ஸ், திரு.ராமு அவர்களுக்கும் எனது மனமார்ந்த அன்பும் நன்றிகளும்.

வாருங்கள் ! இனி வரலாறு படைத்தவரின் வரலாற்றை வாசிப்போம்.

நன்றி ! வணக்கம் ! ஜெய் ஹிந்த் !



# சுதந்திரச் செம்மல் ஆதி நாராயணன் செட்டியார் (அ) அபூர்வ மனிதர் ஆதி நாராயணன் செட்டியார்

**உடுமலைஅமிர்தநேயன்**

இந்திய விடுதலைப்போருக்குத் தலைமை தாங்கி சுதந்திரம் பெற்றுத் தந்தமகாத்மா காந்தியை **தேசப்பிதா** என்றும், ஜவஹர்லால் நேருவை **நவபாரதச் சிற்பி** என்றும் அழைக்கின்றோம்.சர்தார் படேலை **இரும்பு மனிதர்** என்று அழைக்கின்றோம்.

காந்தியடிகளால் தனது **மனசாட்சியின் காவலர்** என்று அழைக்கப்பட்ட முதறிஞர் ராஜாஜி (சி.ஆர்) அவர்களை **அரசியல் சாணக்கியர்** என்று அழைக்கின்றோம்.அவ்விதம் புகழ்பெற்ற ராஜாஜியின் நம்பிக்கைக்கும், அன்பிற்கும் பாத்திரமாக,நெருங்கிய சகாவாகத் திகழ்ந்தவர் சேலம் ப.ஆதிநாராயணன் செட்டியார்.

ராஜாஜியுடன் இணைந்து இந்திய விடுதலைப்போரின் பல்வேறு கட்டங்களில் பங்கெடுத்தவர்.அன்றைய இந்திய தேசிய காங்கிரஸில் பல்வேறு பதவிகள் வகித்தது மட்டுமின்றி, ஆங்கிலேயரை எதிர்த்து பல காங்கிரஸ் மாநாடுகளை பொறுப்பேற்று நடத்தியவர்.மகாத்மா காந்தியடிகளின் பெரும் அன்பைப் பெற்றவராகத் திகழ்ந்தவர் ஆதிநாராயணன் செட்டியார்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள கும்பகோணத்தில் 1879-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22-ஆம் தேதி பிறந்தவர் ஆதிநாராயணன் செட்டியார்.அவருடைய தந்தை டி.பட்டாபிராம செட்டியார்.அவர் தமது பள்ளிப்படிப்பை கும்பகோணத்தில் முடித்த பிறகு தனது மேற்படிப்பை சென்னை கிறித்துவக் கல்லூரியில் தொடர்ந்தார்.ஆதிநாராயணன் செட்டியார்தமது திருமணத்திற்குப் பிறகு தமது மனைவி ஆதிலட்சுமி மற்றும் மகன் ராதாகிருஷ்ணனுடன் அயர்லாந்து சென்றார்.அங்குடிரினிடிகல்லூரியில்சட்டப்படிப்பு படித்து, அயர்லாந்து தேசியப்பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பில் பட்டம் பெற்றார்.அவர் டப்ளினிலும், லண்டனிலும் படித்து பாரிஸ்டராக மாறினார்.

அவர் ஜரிஸ்வழக்கறிஞர்கள் சங்கத்திற்கு 1917-ல் அழைக்கப் பட்டார்.சென்னை நீதிமன்றத்தில் 1918-ல் தம்மை வழக்கறிஞராகப் பதிவு செய்து

கொண்டார் ஆயினும் அவர் வழக்கறிஞர் தொழிலைச் செய்யவில்லை.

ஆதிநாராயணன் செட்டியார் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் நட்பிற்குப் பாத்திரமான பிறகு, சுதந்திரப்போரில் தமது முழுமையான பங்களிப்பை அளித்தார்.

ஆதிநாராயணன் செட்டியார்மணமாகி இருபது வருடம் கழித்து பெண் குழந்தை பிறந்தது. அச்சமயம் சேலத்திற்கு வந்த மகாத்மா காந்தியடிகள் ஆதிநாராயணன்செட்டியாரின் இல்லத்திற்கு விஜயம் செய்தார்.

காந்திஜியை வரவேற்று உபசரித்தார் ஆதிநாராயணன்செட்டியார். தமது பெண் குழந்தையை காந்தியடிகளிடம் கொடுத்தார். காந்தி குழந்தையைக் கைகளில் எடுத்துக் கொண்டு, எடை போடுவது போல மேலும் கீழும் ஆட்டினார். குழந்தை பொக்கை வாயைத் திறந்து சிரித்தது. காந்தியும், பெற்றோர்களும் அதைக் கண்டு ஆனந்தித்தார்கள்.

காந்திஜி உடனே "எனக்கு இந்தக் குழந்தையின் எடைக்கு எடை ராட்டை நூல் கொடுத்தால் எப்படி சந்தோசப்படுவேன் தெரியுமா ? "என்று கேட்டார்.
ஆதிநாராயணன்செட்டியார் திகைத்துப் போனார். குழந்தையை துலாபாரமிட்டுப் பொன்கொடுக்கச் சொன்னாலும் தயாராக இருக்கும் பெரும் செல்வந்தரான அவருக்கு நூல் கொடுப்பது பெரியதல்ல.

அதற்குள் காந்தி சொன்னார், "பல வருடங்களுக்குப் பிறகு உங்களுடைய வீட்டில் பெண் குழந்தை பிறந்திருக்கின்றது. குழந்தை அருமை உங்களுக்குத் தெரியும். நானும் பல வருடங்களுக்குப் பிறகு ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிறேன். சர்க்கா (ராட்டை) நமது நாட்டுக்கு புதிதல்ல. ஆனால் என்னுடைய அருமைக் குழந்தை கதர். குழந்தை அருமை தெரிந்த நீங்கள் உங்களுடைய குழந்தையின் எடைக்குச் சரியாக கதர் நூலைக் கொடுத்தால் எத்தனை குடும்பங்களின் வயிறு நிரம்பும் ?" என்று கேட்டார். பின்னர் குழந்தைக்கு **சரோஜினி** என்று பெயரிட்டார்.



காந்திஜியின் அறிமுகத்திற்குப் பிறகு ஆதிநாராயணன்செட்டியார் முன்பை விட தீவிரமாக காங்கிரஸ் பேரியக்கத்தில் செயல்பட்டார். சேலம் மாவட்ட காங்கிரஸ் கமிட்டிக்கு தலைவராக இருந்து அவர் நடத்திய காங்கிரஸ் மாநாடுகள் பிரசித்தி பெற்றன. ராஜாஜியின் நெருங்கிய நண்பராக விளங்கிய ஆதிநாராயணன் செட்டியார் 1918-ல் சேலத்தில் நடத்திய காங்கிரஸ் மாநாடு பெரும் வெற்றி பெற்றது. முந்நூறு பிரதிநிதிகளும், ஆயிரத்து ஐந்நூறு பார்வையாளர்களும் திரண்டிருந்த இம்மாநாட்டின் ஏற்பாட்டை ராஜாஜி வெகுவாகப் பாராட்டினார்.

1927, நவம்பரில் பிரிட்டிஷ் அரசு ஜான் சைமன் தலைமையில், இந்திய அரசியல் அமைப்பில் மாற்றங்கள் செய்ய ஒரு குழுவை அமைத்தது. கிளமண்ட் அட்லி போன்றோர் இதில் உறுப்பினர்களாக இருந்தனர். (கிளமண்ட் அட்லி பின் நாளில் பிரிட்டிஷ் பிரதமராக பொறுப்பு வகித்தார். 1947ல் இந்தியா சுதந்திரம் பெற்றதற்கு அவரும் ஒரு காரணமாக அமைந்தார்.)

அவ்வாண்டு டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் 'சைமன் கமிஷனை' பகிஷ்கரிப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முகமது அலி ஜின்னாவின் தலைமையிலான முஸ்லீம் லீகின் ஒரு அணியும் இந்த முடிவை ஆதரிக்க, சைமன் கமிஷனை எதிர்த்து பெரும் போராட்டம் நடைபெற்றது. தமிழகத்தில் இந்த போராட்டத்தில் ஆதிநாராயணன் செட்டியார் முன்னணியில் நின்றார்.

1923-லிருந்து 1929 வரை ஆதிநாராயணன் செட்டியார்சென்னை சட்ட மேலவையில் வடஆற்காடு மாவட்டத்தின் பிரதிநிதியாக இடம் பெற்றார்.
சட்ட மேலவை உறுப்பினராக அவர் பல்வேறு பணிகளை ஆற்றினார். மேட்டூர் அணையை சிமெண்ட் கொண்டு கட்டுவதை எதிர்த்தார். சுண்ணாம்புக்கலவை சேர்த்து கட்டுமாறு கூறினார்.

அவர் சிறைக்கைதிகள் படிக்க புத்தகங்கள், உள்ளிட்ட எழுது பொருட்கள் கொடுக்க அரசாங்கம் முன்வந்ததை வரவேற்றார். ஆயின் அதை முன்னிட்டு சிறைகளில் கிறித்தவ மத போதனைகள் செய்வதை எதிர்த்தார்.



அவர் சட்டசபை உறுப்பினராக இருந்தாலும் எச்சமயத்திலும் ஆங்கில அரசாங்கத்தின் அநீதிகளை எதிர்த்துப் போராடத் தயங்கியதில்லை. ஆங்கில அரசாங்கமானது பொது ஜனங்களுடைய உரிமைகளைப் பாதிக்கும் போதெல்லாம் அவர்களுக்காகப் போராடினார். அவர் என்றும் விவசாயிகளின் நண்பனாக திகழ்ந்தார்.

சட்டசபையில் உறுப்பினராகப் பதவி வகித்த ஏழாண்டு காலத்தில் அவர் சபையில் எழுதிய எழுப்பிய கேள்விகளும், பேச்சுக்களும் இந்திய மக்களின் நலனில் அவருக்குள்ள அக்கறை வெளிப்படுத்தின. மக்களும் அதை உணர்ந்து கொண்டார்கள்.

மலபார் குடிவார மசோதா, ஸ்தல ஸ்தாபன மசோதா, மதறாஸ் சர்வீஸ் கமிஷன் மசோதா போன்ற தனி கமிட்டிகளில் அங்கத்தினராக இருந்து அவர் விவசாயிகளுக்கு ஆதரவாக பல பணிகளைச் செய்தார்.

மேலும், மதுவிலக்கு, கிராம புணருத்தாரணம், கதர், கூட்டுறவு போன்ற துறைகளில் அவர் செய்த பணிகள் அன்று மக்களால் பெரிதும் போற்றப்பட்டன. அன்றைய வட ஆற்காடு ஜில்லா விவசாயிகள் சம்மந்தப்பட்ட மட்டில், பாலார் நீர்பாசன விஷயத்தில் அவர் காட்டிய முனைப்பு பெரிதும் பாராட்டிற்குரியதாக இருந்தது. பாலார் நீர்பாசன கமிட்டி நியமனம் குறித்த தீர்மானம் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டும், அரசாங்கங்கள் ஒரு நடவடிக்கையும் எடுக்காத நிலையில் அந்த கமிட்டி அமைக்க பெரும் முயற்சி மேற்கொண்டார்.

1934-மே திங்கள் 21-ல் நந்தியாற்றுக்கு அருகிலுள்ள மகாநந்தியில் நடைபெற்ற அகில இந்திய சுதேசி கண்காட்சியைத் திறந்து வைத்து அவர் ஆற்றிய உரை மிகவும் முக்கியமானதாகும். அவ்வுரையில் இந்திய தேசத்தின் முன்னேற்றத்திற்கான பல ஆலோசனைகளைத் கூறியுள்ளார். அவை இன்றைக்கும் பொருந்துவதாக இருப்பதே அவருடைய கருத்துத் திட்பத்திற்கு எடுத்துக்காட்டு.



அவ்வுரையில் அவர், கைராட்டையில் நூற்கும் பழக்கமும், கதர் தயாரித்தலும் மகாத்மா காந்தியால் விளைந்தவை என்றும், அவர் முயற்சியாலேயே அது நீடித்திருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் சுதேசி இயக்கம் தொடங்கி 30 ஆண்டுகளான பின்பும் அதன் வளர்ச்சி ஏமாற்றமளிப்பதாகவே உள்ளது என்று வருத்தமாக உரைத்தார். இன்னமும். பலகோடி ரூபாய்களுக்கு அந்நிய நாட்டுப் பொருட்கள் இறக்குமதி செய்து கொண்டிருப்பதை சுட்டிக் காட்டினார்.

இன்னமும் அடைய வேண்டிய இலக்கு நிறைய தூரம் உள்ளது. என்று கூறினார். மேலும் இவ்விஷயத்தில் ரஷ்யாவை உதாரணம் காட்டிய அவர், எந்தப் பணிக்கும் திட்டமிடல் என்பது அவசியம். இந்தியா போன்ற தேசிய அரசாங்கம் இல்லாத நாட்டில் இச்சுயசிந்தனை என்பது சற்று கடினமானது என்றும் குறிப்பிட்டார்.

ஆங்கிலேயர்கள் நமது இக்கருத்தை புரிந்து கொள்ளவும் இல்லை. புரிந்து கொள்ள முயற்சிக்கவும் இல்லை என்றார். அதே சமயம் பிற நாடுகளில் மக்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் உதவிகளையும் ஆதரவையும் சுட்டிக் காட்டினார்.

இந்நிலை முன்னேற்றமடைய நன்கு திட்டமிடுவதும், பொருட்களின் விலைகளில் ஸ்திரத்தன்மை கொண்டு வருதலும் மிகவும் அவசியம் என்று ஆலோசனை கூறினார். விலைவாசியிலுள்ள நிச்சயமற்ற தன்மை நமது தேசத்தில் பொருளாதார குழப்பத்தையே ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

நமது கைத்தொழில்களில் உரிய கவனம் செலுத்துவதே மிக முக்கியமான குறிக்கோளாக இருக்க வேண்டும். வெளிநாட்டு இறக்குமதிளைச் சார்ந்து செயல்படுவதை விலக்கிட வேண்டும். இந்த உறுதி நாட்டு மக்கள் அனைவருக்கும் இருந்திட்டால்இந்தியா சுய சார்புள்ளதாகமாறும். அரசின் ஆதரவும் சேரும்பட்சத்தில் இந்தியா மிகப் பெரிய வெற்றி பெறும் என்றும் கூறினார்.

(இக்கருத்து இன்றைய நமது மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திரமோடியின் **Make in India** கொள்கையை ஒத்திருப்பது ஒப்புநோக்கத் தக்கது).

மேலும், ஆதிநாராயணன் செட்டியார், கணிதமேதை ராமானுஜத்தின் நண்பராகவும் திகழ்ந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ராமானுஜத்தின் நட்பு கிடைத்தது. செப்டம்பர் 1916-ல் ஆதிநாராயணன் செட்டியார், கணிதமேதை ராமானுஜத்துடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் இதன் சாட்சியாக விளங்குகிறது. கணிதமேதை ராமானுஜன், கே.ஆனந்தராவ், சாதனூர் சூரிய நாராயண சாஸ்திரி, மற்றும் டென்னதி சூரிய நாராயணன் ஆகிய நண்பர்களுடன் ஆதிநாராயணன் செட்டியார் எடுத்துக் கொண்ட அபூர்வமான புகைப்படம் இது. இதுவன்றி பின்னாளில் உடல் நலம் பாதிக்கப்பட்ட கணிதமேதை ராமானுஜனை தமது மயிலாப்பூர் எட்வர்ட் எலியர்ட்ஸ் ரோடு பங்களாவில் இருக்க வைத்து, அவர் குணமடைய சிகிச்சை அளித்தார். தமது பங்களாவில் ராமானுஜன் தங்குவதற்கு சகல விதமான வசதிகளையும் செய்து கொடுத்தார். கணிதமேதை ராமானுஜன் தமது தாயாருடன் ஆதிநாராயணன் செட்டியாரின் பங்களாவில் தங்கி சிகிச்சை மேற்கொண்டார்.

அதன் பின்னர் இராமானுஜன் மேல்சிகிச்சைக்காக சொந்த ஊரான கும்பகோணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு பிரபல மருத்துவர் பி.எஸ்.சந்திரசேகர ஐயர் இராமானுஜனுக்கு சிகிச்சை அளித்தார்.

ஆயினும், இராமானுஜன் 1920 ஏப்ரல் 26ந் தேதி காலமானார். அதற்கு மறுநாள் 27ந் தேதி ஆதிநாராயணன் செட்டியார் **மெட்ராஸ் மெயில்** பத்திரிக்கையில் இராமானுஜன் குறித்து ஒரு கட்டுரை எழுதினார்.

மூதறிஞர் ராஜாஜிக்கும், ஆதிநாராயணன் செட்டியாருக்குமிருந்த நட்பு குறித்து முன்பே குறிப்பிட்டிருந்தோம். ராஜாஜியின் நம்பிக்கைக்கு மிகவும் உகந்தவராக விளங்கினார் ஆதிநாராயணன் செட்டியார்.

இந்திய சுதந்திரப் போரானது, 1915-ல் தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்தியடிகள் இந்தியா திரும்பிய பிறகு பெரும் மாற்றம் கண்டது. சுதந்திரப் போராட்டங்களின் அணுகுமுறை மாறியது.



தமிழகத்தைப் பொறுத்தவரை காங்கிரஸ் கட்சியானது ஒரு சிலரின் பிடியில் சிக்கியிருந்தது. அதனால் சென்னையைத் தாண்டி பிரமாவட்டங்களில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி பெறாமலிருந்தது. சென்னையில் காங்கிரஸ் தலைவர்கள் இரு பிரிவுகளாக இயங்கிவந்தனர். எனவே, இந்தப்பிரிவினையாலும் ஒற்றுமையின்மையாலும், வங்காளம், குஜராத், மகாராஷ்டிரா போன்று தீவிரமாக இல்லாமல் தமிழகத்தில் காங்கிரஸ் போராட்டங்கள் மெத்தனமாக இருந்தன.

சென்னையில் காங்கிரஸ் கட்சியில் வழக்கறிஞர்கள் படித்த அறிஞர்கள், வசதிபடைத்தவர்கள் இருந்தாலும் அவர்களுக்கு இடையே புரிதலும், ஒற்றுமையும் இல்லாமலிருந்தது.

1918-ல் சேலத்திலிருந்து இராஜாஜி சென்னைக்கு குடிபெயர்த்த நாளிலிருந்து இந்நிலை மாறியது. தென்னிந்தியாவில் காந்திஜியின் முழு ஆசிகளும், ஆதரவும் பெற்றவராக இராஜாஜி விளங்கியதால், கிட்டத்தட்ட காங்கிரஸின் இருதரப்பினரும் அவரின் பேச்சுக்குக்கட்டுப்பட்டனர்.

1919-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பிரிட்டிஷார் **ரௌலட் சட்டம்** என்ற ஒரு கொடுமையான சட்டம் கொண்டுவந்தனர். நாடெங்கும் இச்சட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியது.

1914-18 வரை நடைபெற்ற முதலாவது உலகப்போரில் இந்திய தேசிய காங்கிரஸ் பிரிட்டிஷாரின் யுத்த முயற்சிகளுக்கு துணை நின்று உதவியது. ஆயிரக்கணக்கான இந்தியப்போர் வீரர்கள் பல்வேறு போர் முனைகளிலும் தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தனர்.

போர் முடிந்தபிறகு காங்கிரஸ் டொமினியன் அந்தஸ்து என்கின்ற சுதந்திர உரிமை கிடைக்கும். என்று எதிர்பார்த்தது. ஆனால் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தாங்கள் வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் ரௌலட் சட்டத்தைக் கொண்டு வந்தனர். அதை எதிர்ப்பது என்ற முடிவுக்கு காந்திஜி வந்தார்.



இதன் துவக்கமாக 1919 ஏப்ரல் ஆறாம் தேதி முழு ஹர்த்தால் (கடையடைப்பு) நடத்த, ராஜாஜியுடன் பேசி காந்தியடிகள் முடிவு செய்தார். கடைகளை மூடுதல், கண்டன ஊர்வலங்கள் நடத்துதல், பொதுகூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல் என்று திட்டமிட்டு நடத்தினாலும், மக்கள் அமைதி காத்து நடந்து கொள்ள காந்திஜி வேண்டுகோள் விடுத்தார்.

காந்திஜியின் தலைமையில் நாடுதழுவிய அளவில் நடைபெற்ற முதல் போராட்டம் இதுவே ஆகும். சென்னை நகரில் ஹர்த்தால் நடைபெறுவதற்கான முழு பொறுப்பினையும் ராஜாஜி ஏற்றுக்கொண்டார்.

இராஜாஜியானவர், இப்போராட்டங்களை பிரமாவட்டங்களிலும் சிறப்பாக நடத்த நமது தலைமையில் ஒரு குழுவை அமைத்துக்கொண்டார். தமது நண்பர் டி.ஆதிநாராயணன் செட்டியாரை அக்குழுவில் கொண்டு வந்தார். அவருடன் டாக்டர்.பி.வரதாஜீலு நாயூடு , ஈ.வெ.ராமசாமி (பெரியார்), டாக்டர்.T.S.S.ராஜன், மற்றும் T.V.கல்யாண சுந்தரமுதலியார் (திரு.வி.க) ஆகியோரையும் பங்கு பெறச் செய்தார். மேலும், தீரர்சத்தியமூர்த்தியும் ராஜாஜிக்கு தமது ஒத்துழைப்பை நல்க, அப்போராட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அது மட்டுமின்றி, அதன்பின் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கம், உப்புசத்யாகிரகம் போன்றவை சென்னை மாகாணத்திலும், தமிழகத்தின் பிறபகுதிகளிலும் தீவரமாக நடைபெற்றது. பெரும் சுதந்திர எழுச்சி ஏற்பட்டது. இவை அனைத்திலும் ஆதிநாராயணன் செட்டியாரின் பங்களிப்பு முழுமையாக இருந்தது.

1921-ல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது அதைபகிஷ்கரிப்பது என்று காங்கிரசார் தீர்மானம் நிறைவேற்றினார்கள். ஆங்கிலேய ஆட்சியாளர்கள் 144 தடையுத்தரவு பிறப்பித்துகூட்டங்களை தடை செய்தார்கள். இராஜாஜி தடையை மீறுவது என்று முடிவெடுத்தார்.
1921 டிசம்பர் 14ந் தேதி தடையை மீறி இராஜாஜி ஒரு கூட்டத்தில் பேசுவதாக இருந்தது.



ஆட்சியாளர்கள் ராஜாஜியைக் கைது செய்தார்கள். ராஜாஜிக்கு மூன்று மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

இராஜாஜி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். தனியறையில் அடைக்கப்பட்ட அவருக்கு நல்ல ஓய்வு கிடைத்தது. நிறைய புத்தகங்கள் படித்தார். தினசரி குறிப்புகள் எழுதினார். அவர் டிசம்பர் 21, 1921-லிருந்து மார்ச் 20, 1922 வரை எழுதிய குறிப்புகள் **ஜெயில்டைரி** என்ற தலைப்பில் புத்தகமாக வெளிவந்தது.

அந்த ஜெயில் டைரியில் ராஜாஜி, தமது நண்பர் ஆதிநாராயணன் செட்டியாரைப் பற்றி பல இடங்களில்எழுதியுள்ளார். ஆதிநாராயணன் செட்டியார் அடிக்கடி ராஜாஜியைச் சிறையில் சந்தித்து, அவரின் ஆலோசனைகளை பெற்று காங்கிரஸ் போராட்டங்களை வடிவமைத்தார்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட அதே சமயம் ஆதிநாராயணன் செட்டியாரின் பங்கு கூட்டுறவு இயக்கத்தில் மிக முக்கியமானதாக இருந்தது. அன்றைய ஆங்கிலேய அரசு விவசாயிகளின் கடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 1904-ல் கூட்டுறவு சட்டத்தை நிறைவேற்றியது. இதனடிப்படையில் சென்னை மகாணத்தில் பல கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அன்றைய சென்னை மாகாணம் என்பது தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம், கேரளா மற்றும் கர்நாடகத்தின் சில பகுதிகள் ஆகியன கொண்ட ஒரு பெரும் நிலப்பரப்பு ஆகும். ஆதிநாராயணன் செட்டியார் மூதறிஞர் ராஜாஜியுடன் இணைந்து கைத்தொழில்களை வளர்க்கும் பணியில் ஈடுபட்டார். கூட்டுறவு முறையில் பெண்கள் தொழில்கள் தொடங்க உதவி செய்தார்.

1906-ஆம் ஆண்டு சேலத்தில் ஆதிநாராயணன் செட்டியார் சேலம் மத்திய கூட்டுறவு வங்கியை நிறுவனராக இருந்து உருவாக்கினார். (பதிவு நாள் : 06.01.1906, Under India's Act X of 1904) மேலும் நாமக்கல் போன்ற சேலம் மாவட்டத்தின் பிறபகுதிகளிலும் கூட்டுறவு இயக்கங்களை ஆரம்பித்தார்.

சேலம் கூட்டுறவு வங்கி இன்று மிகப் பெரிய அளவில் வளர்ந்து நிற்கிறது. அவரை **சேலம் மாவட்ட கூட்டுறவு இயக்கத்தின் தந்தை** என்று குறிப்பிட்டால் அது மிகையல்ல .

அவர் 1909ல் சேலம் மாவட்ட அர்பன் வங்கியை துவக்கி, பல்லாண்டுகள் அதன் தலைவராக இருந்தார். 1930ல் ஓய்வு பெற்ற கலெக்டரும் ஆதிநாராயணன் செட்டியாரின் சிறந்த நண்பருமான திவான் பகதூர் ஸ்ரீ ராமசந்திர ராவ் ராசி புரம் தாலூக்காவில் ஏமூர் என்ற ஊரில் கிராம புனருத்தாரண மையம் ஒன்றை அமைத்து விவசாயிகளுக்கு உதவி செய்து வந்தார். ஆதிநாராயணன் செட்டியார் அந்த மையத்திற்கு அவ்வப்போது சென்று ஆலோசனைகள் வழங்கி வந்தார். 1932 ல் திவான் பகதூர் ஸ்ரீ ராமச்சந்திர ராவ் காலமான பிறகு இம்மையம் செயல்பாடு இழந்தது.

எனவே, ஆதிநாராயணன் செட்டியாரானவர், புது டில்லியிலுள்ள விவசாய ஆராய்ச்சி கழகத்தின் துணைத்தலைவரான சர் T.விஜயராகவாச்சாரியாரையும், அதில் உறுப்பினராக இருந்த டாக்டர்.சி.ஆர்.ரெட்டி அவர்களையும், சென்னை மத்திய அர்பன் வங்கியின் தலைவரான ராமதாஸ் பந்துலு அவர்களையும் சேலத்திற்கு அழைத்து வந்தார். அவர்கள் சேலம் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று ஆங்காங்கு உள்ள விவசாயிகளின் நிலையையும், பிரச்சனைகளையும் அறிந்தார்கள். ஆதிநாராயணன் செட்டியாருடன் ஆலோசனை செய்தார்கள்.

அந்த காலக்கட்டத்தில் இந்திய ரிசர்வ் வங்கியும் தோற்றுவிக்கப் பட்டிருக்கவில்லை. எனவே, அப்பகுதி விவசாயிகளுக்கு கடன் உதவி செய்ய சில திட்டங்களை அவர்கள் வகுத்தார்கள். அதன்படி ஆதிநாராயணன் செட்டியார் அந்த சேலம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை கூட்டுறவு பணிகளின் மூலம் செய்து அப்பகுதியை மென் மேலும் வளப்படுத்தினார்கள். மேலும் அவர் 1937ல் நெல்லூரில் நடைபெற்ற கூட்டுறவு மாநாட்டிற்கு தலைமை தாங்கி அதை வெற்றிகரமாக நடத்தினார்



தமது செல்வத்தையெல்லாம் தேச விடுதலைக்கு செலவளித்தவர் ஆதிநாராயணன் செட்டியார் அவர் சேலம் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தது மட்டுமின்றி மேலும் பல்வேறு பொறுப்புகளில் இருந்து சமூகப்பணியாற்றினார்.

அவற்றுள் சில,

- துணைத்தலைவர், சேலம் தாலூக்கா வாரியம்
- தலைவர், சேலம் மாவட்ட அர்பன் வங்கி.
- நிறுவனர், சேலம் மாவட்ட கூட்டுறவு வங்கி.
- இயக்குநர், மெட்றாஸ் மாகாண (Provincial) கூட்டுறவு வங்கி.
- தலைவர், ஆர்ய வைஸ்ய மகாசபா.
- அலுவலர் சாரா உறுப்பினர், சேலம் மாவட்ட பொருளாதார கமிட்டி.
- ஆசிரியர், Rural Life பத்திரிக்கை.

இதுபோன்ற பன்முகத்தன்மை கொண்டும், தேசபக்தியோடும், சமூக சிந்தனையோடும், தீர்க்க தரிசனத்தோடும் திகழ்ந்த அற்புதமனிதர் ஆதிநாராயணன் செட்டியார் 1937-ல் காலமானார்.

இவர் போன்ற தியாகத்தன்மைமிக்க தேசாபிமானிகளால்தான் சுதந்திர பாரதம் என்னும் இப்பெரிய மாளிகை வானுயர்ந்து நிற்கின்றது.கவியரசர் கண்ணதாசன் எழுதியது போல, மாளிகையில் உறங்கி மகிழ்பவனுக்கு அதைக் கட்டியவனின் கஷ்டம் தெரியுமா? என்ற கேள்வி எழுகின்றது.

ஆதிநாராயணன் செட்டியார் போன்ற அற்புதமான தேசபக்தர்களை நினைவு கூறுவதும், அவர் வாழ்க்கை குறித்த பதிவுகளை அடுத்த தலைமுறையினரிடத்தே எடுத்துச் செல்வதும் நமதுதலையாய கடமையாகின்றது.



அவ்வகையில் அன்னாரின் வரலாறு நமக்கு வழிகாட்டும் விளக்காக ஒளி வீசட்டும் ஆதிநாராயணன் செட்டியாரின் புகழ் என்றென்றும் நிலைத் திருக்கட்டும்.

நன்றி ! வணக்கம் !

வந்தே மாதரம் ! ஜெய் ஹிந்த் !

என்றென்றும் அன்புடன்

**உடுமலை அமிர்தநேயன்**

அலைபேசி : 94425 30850



# THE GREAT PATRIOT SALEM P.ADHINARAYANA CHETTY.

*-Udumalai Amirthaneyan*

The freedom struggle of India was unique in many ways. This was won on willing sacrifices of many a things by many. Patriotic fervor in young and old , men and women, irrespective of their caste, creed, community, rich and the poor, educated and the illiterates and people of all walks of life was so tremendous and their unflinching determination and unflagging zeal, in spirit of the oppressive forces, led to the dawn of the Indian freedom on the 15th August 1947.

This tumultuous period had many organized protests against the British. The brutal, physical forces of the British has to wonder at the patriotic spirit and the longing for 'Swaraj' of the Indians. The leaders and people of mother India fought with unstoppable, stupendous courage with their eyes emitting the fire, the British eyes, thought flexing their muscles to subdue the spirited Indian fight for freedom, exhibited only a cadaverous look.

Of course, the focus of surge the Indians exhibited towards the rulers was properly channelized by the leaders who were the role models. They never ever lost their focus against the disdainful approach of the British. The oppressive and suppressive methods employed by the British were so cruel with the aim unnerving this zeal of the Indians were futile. As is the leader; so his followers.

Leaders reposed faith in devoutly following the path of 'Sathyagraha'(the path of non-violence) against the repressive regime of the British. The people followed suit. The honest, upright,

determined leaders with the unequivocal clarion call for Indian freedom led the spirited struggle. The blemishless visionaries were voice of the millions, who tried to mitigate the unabated agony of Indian citizens. So, no doubt they all had a reverence from among people. The adoration for such great leaders, exhalting them to the highest possible grade was no surprise.

Mahatma Gandhi was admired **' The Father of the Nation'**, Jawaharlal Nehru **'The architect of New India'** , and Sardar Patel **'The Iron Man of India'**. Mahatma Gandhi had great veneration for the high-minded, honest, illustrious noble, upright, righteous and trustworthy Rajagopalachari. Gandhiji called him **' The custodian of his conscience'**. Rajaji was admired the Chanakya, of his times. The unparalled sagacity ,pragmatism frankness and fidelity drew towards him the leaders and the common man, for a better counsel as the magnet attracts iron pieces.

One such person associated himself with **Rajaji,** with great reverence to him was Salem**P.ADHINARAYANAN CHETTY**. His contribution to the freedom struggle at various stages with the guidance of RAJAJI was remarkable. As a functioning of the Indian National Congress and by virtue of the position he held at various levels in the congress party he could organize protests and conferences against the British colonial rule. He earned the love and respect of many congress leaders including that of the Mahatma Gandhi.

Adhinarayana Chetty was born on 22nd September, 1879, in Kumba konam,Tanjore(Dt). Adhinarayana had his schooling in Kumbakonam and he joined MCC ( Madras Christian College,



Chennai) and completed his higher studies. After his marriage, he went to Ireland with his wife Adhilakshmi and his son Radhakrishnan and to quench his thirst he continued his law education in Irish National University and came out successfully with a degree in law. He continued his mission of mastering law by joining in the law colleges in Dublin, London and became a Barrister. The Irish lawyers association invited Sri.Adhinarayana in 1917. He registered as a lawyer of Madras High Court in 1918, but didn't practice.

Adhinarayana Chetty's contribution and involvement grew multifold on his becoming a close friend to Sri.Rajaji.

It was twenty years after their married life, Smt.Adhilakshmi gave birth to a female child. **Gandhiji,** during his visit to Salem, called-on Adhinarayana Chetty at his residence. Chetty received the Mahatma with great respect . Gandhiji lifted-up the girl child and moved her up and down in the air as though he wanted to weigh the child. The child giggled and all around who saw this were elated.

Gandhiji told Chetty and his wife that he would be very happy if they could give cotton equal to the weight of the child. Everyone around was happy and Chetty was surprised as he was prepared to give Gandhiji, the gold equal to weight of the child. Gandhiji said that the house has a girl child after many long years. So, the parents and others close to them should be knowing the value of it. He went on to say that he had also given birth to a child **'Khaddhar'** , that is spun of charka, which is (known) not new to any Indian.



Having understood the pleasure of the birth of a child, he wanted them to give him cotton equal to the weight of the child, so as to fructify his ambition of feeding every poor Indian.

His introduction to Gandhiji, hindled in him spirit of nationalism and patriotism. He became very active in congress party. The conferences he organized at Salem in 1918 was big success, three hundred delegates and 1500 observers participated in the conference, eventually to achieve the desired result of freedom to India, which won accolades from Rajaji.

Chetty was the member of Legislative Council, representing North Arcot, from 1923 to 1929. As an MLC he played his role to the satisfaction of the public at large.

He opposed strongly, the use of cement in the construction of Mettur Dam and strongly advocated the use of lime its place.

He welcomed the Governement's move of lending books to prisioners, as he felt that would bring changes in their attitude towards life. But he opposed the preaching of Christianity in the guise of the above move. He never hesitated to voice his concerns when the government brought in legislations against the citizens of this country. He fought for the rights of the people and he was a friend of the farmer. During his 7 year tenure as the MLC of Chennai, the questions raised by him, his arguments, his speeches and every activity of him proves his sincere commitment to the welfare of the public.

He was a member Malabar Legislation Committee, Land Assessment Committee and Madras Service Commission



Legislation Committee and he sincerely worked in the interest of the farmers. His contribution to complete prohibition, rural development and the role of co-operative societies stand a testimony to his commitment for the public welfare. He was instrumental in giving life to the Palar Irrigation Committee thus benefited the farmers of the North Arcot District. He spoke on this issue in the Assembly and questioned why inspite of the approval of the legislative assembly, there was no action on it ?

His speech on the occasion of the inauguration of All India Swadeshi Exhibition on 21st may 1934, was one of the famous speeches of him. His ideas on nation building, hold good even for today and remain to be a proof to his vision for India. In his speech he reminded people that the Charka and Khadhi(khaddar) the brain child of Gandhi are still there because of the Mahatma and expressed his anguish on the unscrupulous was the foreign goods worth crores of rupees were being imported to India, ignoring the call of the Swadeshi Movement. He pointed out how schemes were successful in Russia and in India, where there was no national government, it became in difficult to achieve the target, due to laxity in planning. He felt that it would take a long time to achieve the dreams.

The British, according to him, neither understood the need for this, nor tried to understand the need for this. He went on to point out the support the people get from governments and the reciprocation of the same of the public to the governments, in other countries.

To achieve development, good planning and bringing stability in prices of goods were the key factors, he said. The fluctuations in price of goods would result in chaos in Indian economy, he felt.

We must concentrate on improving skills among the workers and stop importing foreign items. If Indians have this will it would be of no difficulty to achieve self-sufficiency. In the event of the Government, supporting this plan, India would achieve a big success.

This idea of Adhinarayana Chetty and one such idea of the **Prime Minister of India Shri.Narendra Modi, ' Make in India'** fall in the same line of swadeshi and selfreliance.

Adhinarayana Chetty was a friend to the **Mathematical Genius Ramanujan**.

The friendship started at Cambridge – The rare photograph bears a testimony to it. At a latter date Ramanujan who was ill stayed with his mother in the bunglow of Adhinarayana Chetty in Mylapore for his treatment. He was under the medical care of B.S.Chandrasekara Iyer, a leading doctor. But, Ramanujan died on April 26, 1920. The next day Adhinarayana's article on Genius Ramanujan appeared in ' **Madras Mail'.**

References to Adhinarayana Chetty's friendship with the **Sagacious Rajaji** have already been made in this article Adhinarayana became a close aide and confidant to Rajaji.

Indian National Congress made resolution in their meeting to boycott the meetings of Prince of Wales, in 1921.



The rulers imposed 144, to curb the activities of the congressmen. Rajaji geared-up to show the protest and a meeting in this regard was about to be organised on the 14th Dec'1921. But Rajaji was arrested and was imprisioned. He was awarded a jail term of 3 months and was put behind the bars of the Vellore central prison. He made use of this opportunity to read books and he wrote a diary of his experiences in the prison.

His experiences in the prison from 21, Dec, 1921 to 20,March 1922 later was published as a book with the title" **Rajaji's Jail Diary'**. This book of Rajaji has references to Adhinarayana Chetty , who met Rajaji in prison, many a times to get his councel to fight the British by organising protests, stirs and meetings of the INC.

In November 1927, the British conservative government appointed Simon Commission under Stanley Baldwin to report on the working of the Indian Constitution established by the Govt. of India Act of 1919. The Chairman of the concern was John Simon. And Clement Attlee the futuer Prime Minister of British government was one among the seven members of the commission.

The people of Indian sub continent were outraged and insulted, as the Simon commission which was determine the future of India, did not include a single Indian member in it. The Indian National congress, at its Dec.1927 meeting in chennai, resolved to boycott the Simon Commission. Adhi Narayanan Chetty played a crucial role in the **"GO BACK SIMON"** agitation.






He spent wholeheartedly his wealth for the noble cause of India's freedom and in addition to being a congressman his contribution to society as,

* Vice-president - Salem Taluk Board

* President - Salem Urban Bank

* Founder - Salem Co-op. Bank

* Director - Madras Provincial Bank

* President - Arya Vysya Mahasabha

*Member - Salem District Economic Dev.Committee

* Editor - 'Rural Life'( a magazine)……

….was noteworthy and a proof to his commitment uplift the society.



At the same time his role in the co-operative movement was equallyNoteworthy. The then British Government initiated the opening of co-operative societiesinMadras Presidency, in 1904 to mitigate the problems of the poor farmers.

The, then Madras Presidency included Tamilnadu , Andra pradesh, Kerala and a few of the places of Karnataka, a larger area indeed. Adhinarayana Chetty along with Rajaji joined the process of encouraging the farmers and artisans to concentrate on their artistic work, especially art and craft . Also, women were given substantial support to start small business.

In 1906, Sri.Adhinarayana Chetty founded the Salem Central Co-operative society, which later spread its wings in the neighbouring places such as Namakkal. Today, it has grown into leaps and bounds and has been instrumental in the socioeconomic development of that region. Thus, Adhinarayana Chetty can be admired as ' **Father of the Salem Co-operative movement'.**

This patriot, who had divergent thinking and who had a vision for the development of his country and his people passed away in 1937.

India stands tall today in the eyes of the world community because of the sacrifices of great souls like Adhinarayana Chetty.

**" He who lives in palaces may know little about the sufferings of the people who made their palaces a reality"**

Indian freedom was made a reality by the great, unparalled sacrifices of genius architects of Indian freedom movement.


This generation and those who continue to breath the air of freedom may know little or nothing about such uncomparable deeds of greatmen. The lives of Rajaji, his disciple Adhinarayana Chetty speak a lot about great leaders and leadership qualities; their humility inspite of their wealth and scholarship is a message to the generation of today.

This small work on **Adhinarayana Chetty** speaks volumes about his greatness. Let his life be a beacon light to all of us; may his name inspire every Indian to fulfill his dreams !

**'JAI HIND'**



**Relationship between Salem Adhinarayanan Chettiar & V.G. Mohan Prasad.**






**FREEDOM FIGHTER SALEM P. ADHINARAYANAN CHETTIAR'S LIFE HISTORY**

BY UDUMALAI AMIRTHANEYAN

**<u>BIBILIOGRAPHY</u>**


1. Gandhiji's Conscience – Vasanthi Srividhya (Indian Publications)
2. Selected works of Rajagopalachari(1907-1921) – Mahesh Rangarajan
3. Rajaji's 'Jail Diary' (A day to day record of life in Vellore Jail in 1920) (Bhrathiya Vidya Bhavan Publication)
4. Navabharataha Sirpigal –Chakravarthi Rajagopalachariar by P.K.Murthy (Ministry of Publicity and Broadcasting edition)
5. Rajaji's Life History – by Raj Mohan Gandhi
6. Ramanujan's Essays and surveys(American Mathematical Society Book )
7. THE HINDU Daily dated 23.05.1934
8. Salem Cyclopedia by Rajamannar
9. Selected Works of Motilal Nehru - Vol IV(Nehru Memorial Museum and Library)
10. The Illustated Weekly of India dated 04.11.1979
11. Chakkravarthi Rajagopalachari- A biography of his vision and ideas (Deep and Deep Publications, New Delhi)
12. **Dinamani Kathir (Supplementary issue of Dinamani dated 09.03.1980**
13. Kooturavu Iyaakka Munnodikal Vazhvum Thondum - K.Sivaji (Published by Salem District Central Co-operative Bank, Salem)
14. P.Adhinarayanan Chettiar's Appeal for Madras Legislative Assembly Election Pamphlet dated 22.07.1930 (Sathayanesan Printers,Chennai)





**Our Sincere thanks to**

1. Cannemara Public Library, Egmore, Chennai -8.
2. Devaneya Paavanar District Central Library, Chennai -2
3. Anna Memorial Library, Kotturpuram, Chennai-600 085
4. District Central Library, Salem-636 001.
5. The Secretary and staff, Tiruchengode Gandhi Ashram, Chittalandur-637 201.
6. Sri. Adhikesavan, 116-B, First Agraharam, Salem 636 001.
7. Prof.Ramanathan, Dept.of English, Govt. Arts College, Udamalpet-642 126.
8. Sri V. Prabakaran, AGM(Admn.,), Salem District Central Co-operative Bank, Salem.
9. Kalki - Weekly, Ekkaduthangal, Chennai - 32.